

# கிளி / வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்.

# பரிசளிப்பு விழா -2019

29.11.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூர நோக்கு !

ஒளிமயமான வாழ்விற்கு
தரமான அடிப்படைக் கல்வி

# பணிக்கூற்று

பூகோள ரீதியாக சவால்களுக்கு
முகங்கொடுக்கக் கூடிய புத்தாக்கங்களை
உருவாக்கும் பொருத்தப்பாடுடைய சமநிலை
ஆளுமையுள்ள செயற்றிறன் மிக்க பண்பு சார்
நற்பிரஜைகளை சமூகத்துக்களித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/வட்டக்கச்சி
## ஆரம்ப வித்தியாலயம்
# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய வாழியவே
வளமான வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
(வாழிய)

அன்னை தந்தையின் ஆதரவின் பின்
ஆரம்பக் கல்விக்கு அடி எடுத்து வைத்த
சின்ன மழலைகளின் கல்விக்கு வித்திட்ட
சிறந்த நல்ல வித்தியாலயமே
(வாழிய.....)

எண்ணும் எழுத்தும் இசையுடன் கற்று
எழில் தரும் சுற்றாடற் கல்வியுடனே
சமய ஒழுக்கம் ஆங்கிலத்தோடு
ஆக்கமும் ஊக்கமும் கற்றுவளம் பெற
(வாழிய.....)

வனப்புறு நெல்வள கழனியும் சூழ
தண்புனல் அருவி மருங்கினில் பாய
கவின்பெறு கலைகள் அழகுடன் மிளிர
வாழ்க நம் கலைக்கூடம் வளர்க இதன் பணி
(வாழிய......)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாய்மையே வெல்லும்"

# கிளி / வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்.

## பரிசளிப்பு விழா அழைப்பிதழ்

நாள் : 29.11.2019 (வெள்ளிக்கிழமை)

நேரம் : மாலை 3.00 மணி

தலைமை

**திரு.அரசரத்தினம் பங்கையற்செல்வன்**

பாடசாலை முதல்வர்

முதன்மை விருந்தினர்

**திரு.அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**

பிரதம செயலாளர் , வடக்கு மாகாண சபை

சிறப்பு விருந்தினர்

வைத்திய கலாநிதி **தங்கமுத்து சத்தியமூர்த்தி**

பணிப்பாளர் , யாழ் போதனா வைத்தியசாலை

கௌரவ விருந்தினர்

வைத்திய கலாநிதி **ஞானசுந்தரம் கஜன்**

( பழைய மாணவன் ) மருத்துவ அதிகாரி,

யாழ். போதனா வைத்தியசாலை

நிகழ்வு சிறக்க தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய முதன்மை விருந்தினர் அவர்களே! சிறப்பு விருந்தினர் அவர்களே! கௌரவ விருந்தினர் அவர்களே! அன்பிற்குரிய பெற்றோர்களே! நலன் விரும்பிகளே! உப அதிபர் அவர்களே! ஆசிரியர்களே! அன்புக்குரிய மாணவச் செல்வங்களே! இப் பாடசாலையை உவந்தேற்று வளம் சேர்த்து அழகு பார்க்கும் இப் பழைய மாணவர்களே! அனைவருக்கும் அன்பான வணக்கம்.

வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் வரலாற்றின் நான்காவது பரிசில் நாளில் நாம் இங்கு கூடியுள்ளோம். இந்நாள் எம் எல்லோருக்கும் இனிய நாள். வருடம் தோறும் தம் திறமைகளைக் காண்பித்த மாணவர்கள் உவகை கொள்ளும் சிறந்த நாள். தம் ஆற்றல்களையும், திறன் களையும், வெளிக்கொணர களம் தந்த நாள் இந்நாளில் உங்கள் எல்லோருடனும் எமது பாடசாலையின் இவ்வாண்டு செயற்பாடுகளை பகிர்ந்து கொள்வதில் நிறைவடைகின்றேன்.

2012 ஆம் ஆண்டு 1000 இடைநிலை பாடசாலை அபிவிருத் தித் திட்டத்தில் தனியாகப் பிரிந்த இந்த பாடசாலையை 16.01.2015 தொடக்கம் இந்த வளாகத்தில் இரண்டு நெற் களஞ்சிய தகரக் கொட்டகைகளை வகுப்பறைகளாக்கி இயக்கத் தொடங்கினார். இதன் முதல் அதிபர் திரு.த.தர்மராஜா அவர்கள். எந்தவித அடிப்படை வசதிகளுமற்று இவ்விடத்தில் புதிய பாடசாலையை தனித்து இயங்க ஆரம்பித்த அவரது முயற்சி போற்றுதற்குரியது. அப்போதைய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.க.முருகவேல் அவர்களும், இந்த வட்டக்கச்சி சமூகமும் இந்தப் பாடசாலையை இவ்விடத்தில் இயக்க எடுத்த அத்தனை முயற்சிகளும் மறக்க முடியாதவை.

03.03.2016 அன்று இந்தப் பாடசாலைக்கு அதிபராக நான் நியமிக்கப்பட்ட பின்பு எனக்கு எமது கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்வி அமைச்சு, அரச அதிகாரிகள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழங்கிய பேராதரவின் காரணமாக இந்த குறுகிய 3 ஆண்டு காலத்தில் பௌதீக வள ரீதியாகவும், பண்பு சார் வள ரீதியாகவும் நாம் உயரிய ஓர் நிலையை எட்ட முடிந்துள்ளது. இது கல்வியால் எமது சமூகத்தை முன்னேற்ற விரும்பும் எமக்கு தன்னம்பிக்கையையும், உற்சாகத்தினையும் தருகிறது.

வட்டக்கச்சி கிராமம் கிளிநொச்சியின் பழைமை வாய்ந்த கிராமம், கல்வியாலும், கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினாலும் எழுச்சி கொண்டு நிற்கும் கிராமம். இதன் காரணமாக எமது பாடசாலை மட்டுமல்ல, இந்த கிராமத்திலுள்ள அத்தனை பாடசாலைகளும் தனித்துவமான அபிவிருத்திப் போக்கினைக் கொண்டுள்ள பாடசாலைகளாக வளர்ந்து வருகின்றமை அவதானிக்க கூடியதால் கிளிநொச்சி கல்வி வலயத்தில் விசேட அபிவிருத்தி வலயமாக எமது கிராம பாடசாலைகள் விருத்தி கண்டு வருவதில் பேருவகை கொள்கிறோம். இந்த கைங்கரியத்திற்கு காரணமாக இருந்து வரும் பெற்றோர், புலம்பெயர் பழைய மாணவர்களதும் ஒத்துழைப்பும் பேராதரவும் மனம் கொள்ளத் தக்கதாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவதாக எமது பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளில் திறன் வகுப்பறைகளை (Smart Class Room) பயன்படுத்தத் தொடங்கினோம். இவை கற்றல் கற்பித்தலில் இலகு நிலையை ஏற்படுத்தியதுடன் மாணவர்கள் விரும்பிக் கற்கும் நிலையினையும் ஏற்படுத்தியது. அத்துடன் மாணவரின் வரவு வீதம் அதிகரிக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் சில சிரமங்களை எதிர்கொண்டாலும் இப்போது இச் செயற்பாடு இலகுபடுத்தப்பட்டுள்ளது. எமது பாடசாலையில் தற்போது 9 வகுப்பறைகளில் இந்த Smart Board பயன்பாட்டிலுள்ளன. பத்தாவது வகுப்பறையில் விரைவில் திறன் வகுப்பறையாக்கி கிளிநொச்சியின் முதல் Smart School என்ற என்ற பெருமையையும் எட்டுவதற்காக முயன்று கொண்டிருக்கிறோம். வருகின்ற ஜனவரி மாதத்தில் இந்த இலக்கினை எட்டி விடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையைப் போல் இன்று கிளிநொச்சியில் 43 பாடசாலைகளில் 155 Smart வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த செயற்பாட்டை கிளிநொச்சியில் முதல் கொண்டு வந்தவர்கள் என்பதில் நிறைவடைகின்றோம். அத்துடன் இலங்கையில் ஓரிரு பாடசாலைகளில் மட்டும் நடைமுறையில் இருக்கும் Tablet கணினிகளை வகுப்பறைகளில் பயன்படுத்தும் செயற்பாடு எமது பாடசாலையிலும் நடைமுறையில் இருப்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

இவ்வருடம் நூலக அபிவிருத்திக்காக இலத்திரனியல் நூலகம் e.library ஒன்றை 20 கணினிகளைப் பயன்படுத்தி உருவாக்கியுள்ளோம். மாணவர்கள் விரும்பி வாசிக்கும் 300 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இந்நூலகத்தில் பயன்பாட்டில் உள்ளன.

இவ்வாறான நவீன செயற்பாடுகளின் காரணமாக எமது பாடசாலையைத் தரிசிப்பதற்காக எமது வலயத்திலிருந்தும், வேறு வலயங்களிலிருந்தும் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியியலாளர்கள் வருகை தந்து செல்வதும், தங்களது தேவைகளுக்காகவும், பயிற்சிகளுக்காகவும் எமது ஆசிரியர்களை வளவாளர்களாகப் பயன்படுத்தும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எமது பாடசாலை வளாகத்தினை அழகாகவும் நேர்த்தியாகவும், சுகாதார மேம்பாட்டுடன் வைத்திருப்பதற்கும், அந்நிலையைத் தொடர்ந்து பேணுவதற்கும் எம் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் வழங்கும் பங்களிப்பு பெறுமதியானது. நாளாந்தம் காலையில் பெற்றோர்கள் எமது வளாகத்தினை கூட்டித் துப்பரவு செய்யும் பணியை எந்தவித வற்புறுத்தலுமின்றி விரும்பி செய்து வருகின்றனர். இதனால் எமது பாடசாலை வளாகம் ஒரு பூங்காவைப் போல் காட்சி தருகின்றது. சுற்றாடல் முன்னோடிக் கழக செயற்பாடுகள் கிரமமாக மேற்கொள்ளப்படுவதால் சிறந்த சுற்றாடல் முன்னோடிப் பாடசாலை ஒன்று என்ற பெருமையையும், இலங்கையில் சுற்றாடல் முன்னோடிப் பாடசாலை என்ற பெயர்ப் பலகையை பொறித்த முதற் பாடசாலை என்ற பெருமையையும் இவ்வாண்டு பெற்றுக் கொண்டோம்.

எமது பாடசாலை ஒரு பிள்ளைநேயப் பாடசாலை (Child Friendly School) ஆகும். இதனால் பாடசாலைக்கு பிள்ளை விரும்பி வரும். அக, புறச் சூழலை உருவாக்கி வருகிறோம். மாணவர்களுக்கு தண்டிக்கும் நிலையை விடுத்து அவர்களுடன் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொள்ளும் சூழலை வளர்த்தெடுத்துள்ளோம். புறச் சூழலை விருத்தி செய்யும் வகையில் மாணவர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் வசந்த நிழல் என்னும் நீர் சூழலை உருவாக்கினோம். இதற்கு முழுமையான அனுசரணை வழங்கிய சிவகுரு யசோதரன் அவர்களை இவ்விடத்தில் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

எமது செயற்பாடுகளைக் கேள்வியுற்று லண்டனில் வாழும் Ratnam Foundation நிறுவுனர், பேராசிரியர் ரட்ணம் நித்தியானந்தன் அவர்கள் எமக்கு திறன் வகுப்பறை ஒன்றை முழுமையாக அமைத்துத் தந்தமைக்காக எமது சமூகம் சார்பான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் இரு தடவைகள் லண்டனிலிருந்து எமது பாடசாலைக்கு வருகை தந்து எம்மை உற்சாகப்படுத்தி வருகின்றமை நிறைவினைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 1 முதல் கணினிக் கல்வியை வழங்கி வருகின்றோம். எமது கணினிக் கட்டடத்திற்கு வளம் சேர்க்கும் Care for Education - USA அமைப்பின் தலைவர் செல்லையா தேவராஜன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். அவரது நல்லெண்ணம் காரணமாக எமக்கு இதுவரை 18 மடிக்கணினிகளை வழங்கி கணினி கூடத்தை வளமாக்கியுள்ளார்.

ஆசிரிய ஆளனியில் எமக்கு கணினி ஆசிரியர் இல்லாத போதும் கணினி ஆசிரியரை அமைய அடிப்படையில் நியமித்து கல்வி கற்பிக்க மாதாந்தம் 10000/- சம்பளத்தை வழங்கி வரும் SJC 87 Initiative நண்பர்களுக்கு நெஞ்சகலா நன்றிகள். அதே போல் சிங்கள பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை கடந்த இரண்டு ஆண்டு களுக்கு மேலாக வழங்கி வரும் பழைய மாணவி சகோதரி சுகுணா சுதாகரன் அவர்களுக்கும், கத்தோலிக்க பாட ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்கி வரும் எமது பங்குத் தந்தை பிறைன் அடிகளார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இவ் வருட ஆரம்பத்தில் எமக்கு இரண்டு வகுப்புக்கள் தகரக் கொட்டகைகளிலேயே இருந்தன. இதனை மாற்றியமைக்க பல முயற்சிகள் மேற்கொண்டோம். அதன் பயனாக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்

ஜோண் குயின்ரஸ் அவர்களின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி செயலக நிதி அனுசரணையில் 60 X 25 அடி புதிய கட்டடம் ஒன்று கிடைத்தது. கௌரவ ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் பணிப்பின் பேரில் இலங்கை இராணுவத்தினர் தமது முழுமையான மனித வளத்தைப் பயன்படுத்தி இரு மாத காலத்தினுள் இக் கட்டடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து மாணவரின் பயன்பாட்டுக்கு வழங்கினர். இந்த உயரிய கைங்கரியத்திற்காக எம் கல்லூரி சமூகம் சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம். இக் கட்டட உருவாக்கத்தில் பெற்றோர்கள் வழங்கிய உடலுழைப்பையும் உவகையுடன் நினைவிற் கொள்கிறோம்.

"எல்லாப் பாதைகளும் ரோமிற்கே" என்ற வார்த்தையைப் போல் இங்கு உள்ள எல்லா வளங்களும் பிள்ளைகளுக்கே!

அன்பான பெற்றோர்களே! ஒரு குறுகிய காலத்தினுள் எம் எல்லோரிடமும் இருந்த ஆற்றல், தொடர்பாடல், சமூக மானம், பரோபகாரத் தன்மை என்பன வற்றின் காரணமாக எமது பாடசாலையை வளமிக்கதாக மாற்றி யுள்ளோம். இது எங்கள் பிள்ளைகளுக்கானது, எங்கள் சமூகத்திற்கானது. இதனை உச்சமாகப் பயன்படுத்தி எம் மாணவர்களை அறிவு சார்ந்த ஆற்றல் மிக்கவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு உங்கள் ஆதரவினை வேண்டுகின்றேன். தொழிநுட்ப ரீதியாகவும், ஆங்கில புலமையுடனும் எங்கள் குழந்தைகளை வளர்த்தெடுத்து செல்வோம். இதுவே நிகழ் காலத்தினதும், எதிர் காலத்தினதும் தேவையாகும். கடந்த காலங்களில் நாம் இழந்தவற்றை அல்லது எமக்கு கிடைக்காதவற்றை எம் பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்போம். அதற்காக எம்முடன் கைகோர்க்குமாறு அன்பாக அழைக்கின்றேன்.

பெற்றோர்களே! உங்களில் சிலர் வேலைகள் காரணமாகவும், வேலை வழங்குவோரின் கட்டுப்பாடுகள் காரணமாகவும் பாடசாலை வரும் எம் பிள்ளைகளுக்காக ஆற்ற வேண்டிய பணிகளிலிருந்து விலகி நிற்கின்றனர் என்பது கசப்பான உண்மையாகும். இதனை மாற்றியமைக்க உங்களுக்கு தொழில் வழங்கும் ஆடைத் தொழிற்சாலை முகாமையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளேன். சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதுக்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் கல்வித் திணைக்களத்தினர் போன்றோரின் ஆதரவுடன் பிள்ளைகளுக்கான சகல உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க முயற்சி எடுத்து வருகிறோம். இம் முயற்சிக்கு உங்கள் ஆதரவினை வேண்டி நிற்கிறோம்.

பொருளாதார ரீதியில் நலிவுற்றுள்ள அல்லது பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகளையும் எமது பழைய மாணவர்கள் மற்றும் நண்பர்களின் உதவியுடன் வழங்கி வருகின்றோம். பசுமாடு வழங்குதல், ஆடு வழங்குதல், கோழி வளர்ப்பு ஊக்குவிப்பென பல இலட்சம் உதவிகளை எம் பெற்றோருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளோம். வீட்டில் பொருளாதார மேம்பாடு கண்டால் எம்மிடம் வரும் பிள்ளை ஆரோக்கியமாக வருவான் என்ற புரிதலே இந்த உதவிகள் பெற்றுக் கொடுத்தலுக்கான காரணம் ஆகும்.

பெற்றோர்களே! எப்போதும் உங்கள் பிள்ளைகளின் கல்வி மேம்பாடு பற்றி சிந்தியுங்கள். கல்வி ஒன்றின் மூலமாகவே நாம் இழந்தவற்றைப் பெற்றுக் கொள்ளவும், எல்லோருடனும் சமனாக நின்று கொள்ளவும் முடியும் என்பதை உணருங்கள். உங்கள் பிள்ளைகளின் கல்விச் சாலைகளுக்கு உங்களால் முடிந்தளவிற்கு உதவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[redacted]

பாடசாலைகள் கல்வியை மட்டும் வழங்கும் ஒரு நிறுவனமல்ல. அவை சமூக மாற்றங் களுக்காக பணிபுரியும் நிலையங் களாகவும் மாற வேண்டும் ஒரு நல்ல பாடசாலை மூலம் தரமான கல்வியை வழங்க முடியும். தரமான கல்வி மூலம் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

அன்பான புலம்பெயர் பழைய மாணவ உறவுகளே! நீங்கள் புறத்தில் வாழினும் உங்கள் கனவும், நினைவும் உங்கள் ஊர் சார்ந்ததாகவும் பாடசாலை சார்ந்ததாகவும் இருப்பது கண்டு பூரிப்படைகிறோம். உங்கள் அன்பும் ஆதரவும் எம்மை உற்சாகப்படுத்துகின்றது. இந்த சமூகத்திற்காக பணியாற்றுவதில் பெருமையும், மன நிறைவும் அடைகிறோம். உங்களின் உதவிகள் மூலமே இங்குள்ளவை அனைத்தும் சாத்தியமாயிற்று. அதற்காக எங்கள் நன்றிகள்.

எமது ஆரம்பப் பாடசாலைகளின் அடையாளம் தரம் - 5 புலமைப் பரீட்சையின் பெறுபேறு ஆகும். அந்த வகையில் தொடர்ச்சியாக உயரிய பெறுபேற்றினை பெற்றுக்கொண்டு வருகிறோம். இம்முறை 11 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கின்றமைக்கு ஆசிரியர்களிதும், பெற்றோர்களதும் அயராத முயற்சியும், உழைப்பும் காரணமாகும். இம்முறை தரம் - 5 புலமைப் பரிசில் வகுப்பின் ஆசிரியர்களாகப் பணியாற்றிய திரு.தேவராசா நிகேதரன், திருமதி. விஜயா தயாபரன் இருவருக்கும் எனது அன்பும் பாராட்டும் உரித்தாகுக. இந்த வளாகத்தில் நாம் எண்ணும் காரியங்கள் அனைத்தையும் சிறப்பாக நிறைவேற்றி முடிக்க பங்காற்றும் சகல ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர், உறுப்பினர்கள் அனைத்து பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் என் இனிய நன்றிகள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை விருந்தினர் அவர்களே! எமது அன்பான அழைப்பினை ஏற்று வருகை தந்து முழுமையாக எம்முடன் இருந்து நிகழ்வினைச் சிறப்பித்தமைக்கு எம் கல்லூரி சமூகம் சார்பில் நன்றிகள். எமது மாகாணத்திலும், மாகாணத்திற்கு வெளியிலும் பல்வேறு உயர் பதவிகளை வகித்து தற்போது எமது மாகாணத்தில் பிரதம செயலாளராக எம் சமூகத்திற்கு நிறைவான பணியாற்றுவதைப் போற்றுகிறோம். தங்கள் ஆளுமையை அறியும் போதும் நேர்த்தியைக் காணும் போதும் மகிழ்வடைந்தவர் நாம். இன்று எம் வளாகத்தில் எம் அருகில் இருப்பது உற்சாகத்தையும் மகிழ்வினையும் தருகிறது. தங்கள் வருகையால் எமது பாடசாலையும் கிராமமும் வளம் பெறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தங்கள் வருகையால் நாங்கள் பேருவகை கொள்கின்றோம்.

சிறப்பு விருந்தினர் அவர்களே! எமது பாடசாலையின் பல்வேறு செயற்திட்டகளுக்கு அனுசரணை வழங்கி வருகிறீர்கள். எமது மாகாணத்தில் மருத்துவப் பணியில் தாங்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. மருத்துவப் பணியுடன் எமது மாவட்டத்தில் கல்வி மேம்பாட்டிற்காக இடையறாப் பணியாற்றி வருவது எம் எல்லோருக்கும் பெரும் உற்சாகத்தைத் தருகிறது. தங்கள் முயற்சியால் எமது பாடசாலையில் ஒரு திறன் வகுப்பறை உருவாக்கப்பட்டுள்ளது. இதைவிடவும் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆண்டு தோறும் விசேட வகுப்புகளுக்காக பங்களிப்பு நல்குவதை மனம்கொள்கிறோம். மனிதநேய மருத்துவ பணியால் மக்களின் மனங்களிலும் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் மனங்களிலும் நிறைந்துள்ள தங்களின் பணி மேன்மைபெற வாழ்த்துகிறோம்.

கௌரவ விருந்தினர் அவர்களே! இந்தக் கிராமத்தில் பிறந்து கொடிய போர் நெருக்கடி காலத்தில் கல்வி கற்று மருத்துவராக உயர்ந்து நிற்பதை எண்ணி எங்களூர் பெருமை கொள்கிறது. எங்கள் சிறிய பிள்ளைகள் முன்னால் Role Model ஆக நீங்கள் உயர்ந்து நிற்கிறீர்கள். உங்களைப் பார்த்து இன்னும் பல மருத்துவர்கள் இந்த ஊரில் உருவாகுவார்கள். உங்கள் வருகையால் நாங்கள் நிறைவும் மகிழ்வும் அடைகிறோம்.

நிறைவாக இந்தப் பரிசில் நாள் நிகழ்வு சிறப்பாக நடைபெற தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அனுசரணை வழங்கி வரும் புலம்பெயர் பழைய மாணவர்கள் எம்மூரில் வாழும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அன்பர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அன்பான மாணவர்களே! எமது பாடசாலையிலுள்ள மொத்த மாணவர்களில் 70 விகித மாணவர்கள் பரிசில்களைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளீர்கள். பாடசாலை நாளாந்த செயற்பாடுகளின் போதும் அவ்வப்போது தொடர்ச்சியான பரிசில்களைப் பெற்று வந்துள்ளீர்கள். இந்நிலை இனிவரும் காலங்களில் பெருக வேண்டும். பாடசாலையின் முழுமையான மாணவர்களும் தங்கள் திறமையால் இவ்வாறான பரிசில் நாளில் பரிசில் பெற வேண்டுமென விரும்புகிறேன்.

அன்புக்குரியவர்களே! எழுச்சி மிகு நாகரீகமான கல்விச் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப தங்கள் அனைவரினதும் ஆதரவினை தொடர்ந்து எதிர்பார்த்து உங்கள் கரங்களை இறுகப் பற்றி விடைபெறுகின்றேன்.

நன்றி

அ.பங்கையற்செல்வன்

அதிபர்

கிளி / வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

29.11.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழாம் -2019



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு 2019 / 2020





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

## Year 1



| | நிலை |
|---|---|
| ல. யுனிற்றா | 01 |
| செ.சனோஜன் | 02 |
| ஈ. யாகீசன் | 03 |
| கு. சஸ்வினி | 04 |
| தி. பிரதிக்ஷன் | 05 |
| றொ. டோசினா | 06 |
| சி. விம்சிகன் | 07 |
| செ. நிஷிகா | 08 |
| ஜெ. அகிம்ஷன் | 09 |
| ற. கிவிதிகா | 09 |
| ஜெ. ரலற்ரவிசோன் | 11 |
| சி. ரக்ஷாயினி | 12 |
| கி. கிருத்திகா | 13 |

| | நிலை |
|---|---|
| செ. யதுஷாளினி | 14 |
| பி. சஞ்சஜன் | 14 |
| கு. கஜேன் | 16 |
| இ. ஆயித்தியா | 17 |
| ச. ப்றேசியா | 18 |
| யே. மியூசிகா | 19 |
| வ. திலுக்ஷன் | 20 |

## year2

| | நிலை |
|---|---|
| சி. கேசவி | 01 |
| லோ. ரிசோபன் | 02 |
| ப. தரணிகன் | 03 |
| க. சரண்ஜன் | 04 |
| அ. அபிசன் | 04 |
| ஜீ. நவீனன் | 06 |
| ச. உமாருதிகா | 07 |
| ஜெ. கார்ணிஹா | 08 |
| பி. அபிநாஸ் | 09 |
| சி. அக்ஷயா | 10 |

| | நிலை |
|---|---|
| கு. டக்ஷஜா | 11 |
| உ. பதுர்சன் | 12 |
| உ. சபிசாஜினி | 13 |
| நி. தஸ்மி | 14 |
| க. தரணிதன் | 15 |
| ஸ்ரீ. சுதர்ஷா | 16 |
| அ. பிரமினா | 16 |
| பி. சாகித்தியன் | 18 |
| தே.கவிஷாளன் | 19 |
| ஜெ. கஜீவன் | 20 |
| செ. கம்சாயினி | 20 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

## Year 3

| | நிலை |
|---|---|
| சு. கம்சிகன் | 01 |
| ம. கவின் | 02 |
| ச. .விபிஷா | 03 |
| ஜெ. தக்ஷனா | 04 |
| யூ. அபிநிஷன் | 05 |
| மா. கலைமதி | 06 |
| சி. கேனுஜன் | 07 |
| க. சுஜீதன் | 08 |
| ம. மேரியஸ்மிதா | 09 |
| கு. தட்சயன் | 10 |
| அ. நயனிகா | 11 |
| கு. திகானி | 12 |
| க. சியாந்தி | 13 |
| ற. சம்யுத்தன் | 14 |
| கீ. கீர்த்திகா | 15 |
| கோ. நிக்சிகா | 16 |
| சி. யூட்சன் | 17 |
| சி. பவிசன் | 18 |
| கோ. இன்பரசன் | 19 |
| தி. அதிபவன் | 20 |

## Year 4

| | நிலை |
|---|---|
| கி. புருசோத் | 01 |
| ந. அபர்சிகா | 02 |
| ரா. கபிஷன் | 03 |
| சு. அபிஷேக் | 04 |
| அ. பிருந்தா | 05 |
| சி. ஹர்சிகா | 06 |
| ச. ஹபிசன் | 07 |
| லோ. அக்சயன் | 08 |
| யூ. அக்ஷயன் | 09 |
| சி. சபரீகரன் | 10 |
| ஜெ. கவிசன் | 11 |
| ஜெ. கோபிக்ஷன் | 12 |
| பா. டினோஜன் | 13 |
| ச. தர்விசன் | 14 |
| சி. தரண்ஜன் | 15 |
| சி. கபிஷா | 16 |
| சா. சானுஜா | 17 |
| ச. கிந்துசானி | 18 |
| சி. அபிசனா | 19 |
| பு. திரிசா | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் –1 மாணவர்கள்



# தரம் –2 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் –3 மாணவர்கள்



## தரம் –4 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

## Year 5

| | நிலை |
|---|---|
| து. தர்சிகா | 01 |
| ஜெ. ஆரணி | 02 |
| இ. மரூஜா | 03 |
| மா. தாருமதி | 04 |
| சி. தனுசிகன் | 05 |
| ச. சனுசியா | 06 |
| ற. துருவ்விந்தன் | 07 |
| செ. திரிசாளினி | 08 |
| த. தர்மிகா | 09 |
| ந. அனுரதன் | 10 |
| ஜெ. பிரமிலன் | 11 |
| கு. டனுசிகன் | 12 |
| வ. வபிஷன் | 13 |
| சி. ரேணுஜா | 14 |
| க. லக்ஸ்மிகா | 15 |
| நே. தேனுஷா | 16 |
| கு. கனுசிகன் | 17 |
| பி .சுவர்ணன் | 18 |
| தே. பிரவீனா | 19 |
| பே. ரிறோனிஸ் | 20 |

### வாழ்க்கை என்பது

| | | |
|---|---|---|
| ஒரு சந்தர்ப்பம் | – | நழுவ விடாதிருங்கள். |
| ஒரு கடமை | – | நிறைவேற்றுங்கள். |
| ஒரு இலட்சியம் | – | சாதியுங்கள். |
| ஒரு சோகம் | – | தாங்கிக்கொள்ளுங்கள். |
| ஒரு போராட்டம் | – | வென்று காட்டுங்கள். |
| ஒரு பயணம் | – | நடத்தி முடியுங்கள். |

– திரு.அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு பெரியார் பேச்சுப் போட்டி
# பரிசு பெற்றோர் விபரம்

| தரம் | அன்னை திரேசா 2019 | நிலை | யோகர் சுவாமிகள் 2019 | நிலை | CWW கன்னங்கரா 2019 | நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | ல. யுனிற்றா | 1 | றொ. டோசினா | 1 | ஈ. யாகீசன் | 1 |
| | செ. சனோஜன் | 2 | ஈ. யாகீசன் | 2 | ல.யுனிற்றா | 2 |
| | கு. சஸ்வினி | 3 | செ. சனோஜன் | 2 | கு.சஸ்வினி | 3 |
| | | | ல. யுனிற்றா | 4 | செ. சனோஜன் | 4 |
| | | | சி. விம்சிகன் | 5 | பி. சஞ்சயன் | 5 |
| 2 | சி. கேசவி | 1 | ப. தரணிகன் | 1 | ப. தரணிகன் | 1 |
| | கு. டக்சயா | 2 | சி. கேசவி | 2 | லோ.ரிசோபன் | 2 |
| | ப. தரணிகன் | 3 | உ. பதுர்சன் | 3 | சி.கேசவி | 2 |
| | | | ஜெ. கார்ணிகா | 4 | ஜெ. கார்ணிகா | 4 |
| | | | லோ. ரிசோபன் | 5 | ப. சபிசாயினி | 5 |
| 3 | கு. திகானி | 1 | சு.கம்சிகன் | 1 | ச.விபிஷா | 1 |
| | ம. கவின் | 2 | மா. கலைமதி | 1 | சு.கம்சிகன் | 2 |
| | யூ. அபிநிஷன் | 3 | ம.மேரியஸ்மிதா | 3 | கு. திகானி | 3 |
| | | | ற.சம்யுக்தன் | 4 | | |
| | | | ஜெ. தக்சனா | 5 | | |
| 4 | ச. ஹபிசன் | 1 | ஸ்ரீ. ஹர்சிகா | 1 | சு. அபிஷேக் | 1 |
| | யூ.அக்ஷயன் | 2 | ந. அபர்சிகா | 1 | சு.சபரீகரன் | 2 |
| | சி. சபரீகரன் | 3 | சு. அபிசேக் | 3 | சா. சானுஜா | 3 |
| | | | ச. ஹபிசன் | 4 | ந. அபர்சிகா | 4 |
| | | | சா. சானுஜா | 5 | ஸ்ரீ. ஹர்சிகா | 5 |
| 5 | ஜெ. ஆரணி | 1 | மா. தாருமதி | 1 | து.தர்சிகா | 1 |
| | து. தர்சிகா | 2 | ற. துருவிந்தன் | 2 | ஜெ.பிரமிலன் | 2 |
| | | | செ. திரிசாளினி | 3 | இ.மரூஜா | 3 |
| | | | இ.மரூஜா | 4 | செ. திரிசாளினி | 4 |
| | | | பே. ரிறோனிஸ் | 5 | நே. தேனுசா | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு பெரியார் பேச்சுப் போட்டி
# பரிசு பெற்றோர் விபரம்

| தரம் | அப்துல்கலாம் - 2018 | நிலை | பில்கேட்ஸ்-2018 | நிலை |
|---|---|---|---|---|
| 1 | ச. உமாருதிகா | 1 | ப.தரணிகன் | 1 |
| | உ. பதுர்சன் | 2 | ஜீ.நவீனன் | 2 |
| | க. சரண்ஜன் | 3 | ப.சபிசாஜினி | 3 |
| | ப. சபிசாஜினி | 4 | ச. உமாருதிகா | 4 |
| | ஜீ. நவீனன் | 5 | க.சரண்ஜன் | 5 |
| 2 | மா.கலைமதி | 1 | மா.கலைமதி | 1 |
| | சு.கம்சிகன் | 2 | ம.மேரியஸ்மிதா | 2 |
| | யூ.அபிநிஷன் | 3 | சு.கம்சிகன் | 3 |
| | ச.விபிஷா | 4 | ஜெ. தக்சனா | 4 |
| | | | யூ.அபிநிஷன் | 5 |
| | | | ம.கவின் | 5 |
| 3 | சு. அபிசேக் | 1 | ச. ஹபிசன் | 1 |
| | ச. ஹபிசன் | 2 | ந. அபர்சிகா | 2 |
| | சி.சபரீகரன் | 3 | ச.தர்விசன் | 3 |
| | ந. அபர்சிகா | 4 | யூ.அக்ஷயன் | 4 |
| | ச.தர்விசன் | 5 | பா.டினோசன் | 5 |
| 4 | து.தர்சிகா | 1 | ஜெ.ஆரணி | 1 |
| | கோ.துசாளினி | 2 | து. தர்சிகா | 2 |
| | மா.தாருமதி | 3 | த. தர்மிகா | 3 |
| | சி.தனுசிகன் | 4 | ற.துருவிந்தன் | 4 |
| | ச.சனுசியா | 5 | ச.சனுசியா | 5 |
| 5 | வி.சங்கீதா | 1 | | |
| | பி.சாதுரி | 2 | | |
| | சு.மிதுனா | 3 | | |
| | அ.அபினா | 4 | | |
| | சி.ரிந்துசன் | 5 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனை மாணவர் விபரம் – 2019

| இல | தரம் | மாணவர் விபரம் | கோட்டம் | வலயம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 04 | கிருபாலன் புருசோத்<br>(சிறுவர் சித்திரம்) | 01 | 01 | – | |
| 02 | 05 | துரைலிங்கம் தர்சிகா<br>(சிறுவர் சித்திரம்) | 01 | 01 | – | |
| 03 | 05 | சக்திவேல் சனுசியா<br>(ஆங்கில தினம்) | 01 | 01 | – | |
| 04 | 05 | தர்மகுமார சூரியாஸ் தர்மிகா<br>(வாசிப்பு) | 01 | 01 | – | |

## சதுரங்கப் போட்டி –2019
## தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| Under 7 Boys | 01 | க. சரண்ஜன் |
| | 02 | சு. கம்சிகன் |
| | 03 | உ. பதுர்சன் |
| | 04 | ப. தரணிகன் |
| Under 7 Girls | | அ. நயனியா<br>சி.கேசவி |
| Under 9 Boys | | ச. ஹபிசன்<br>கி. புருசோத் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் –5 மாணவர்கள்



பல்துறை திறமைசார்
முதன்மை மாணவன்



செல்வன்
சிவபாலன் மாதுளன்

புலமைப்பரிசில் பாடசாலை மட்ட
முதல் நிலை மாணவி



செல்வி
ஜெயகாந் ஆரணி

பல்துறை திறமைசார்
முதன்மை மாணவி



செல்வி
துரைலிங்கம் தர்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Scholarship


ஜெ.ஆரணி - 178


து.தர்சிகா- 177


மா.தாருமதி - 169


ஜெ.பிரமிலன் -163


இ.மருஜா - 160


ற.துருவ்விந்தன் -159


ச.சனுசியா - 159


பி.சுவர்ணன் - 155

தரம் – 5
புலமைப்பரிசில்
பரீட்சை –2019
வெட்டுப்புள்ளிக்கு மேல்
பெற்ற மாணவர்கள்


செ.திரிசாளினி -153


ந.அனுரதன் -152


த.தர்மிகா -152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர் விபரம் – 2019

| தரம் | நவராத்திரி தினப் போட்டிகள் | நிலை | மாதிரிச்சந்தை | நிலை |
|---|---|---|---|---|
| 1 | கோலப்போட்டி | | | |
| | தி. பிரதிக்ஷன் | 01 | இ. சாயித்தியா | 01 |
| | ஈ. யாகீசன் | 02 | பி. சஞ்சஜன் | 02 |
| | ல. யுனிற்றா | 03 | சி. ரக்சாயினி | 03 |
| | தீ. யகீர்த்தனா | 04 | | |
| | றொ. டோசினா | 05 | | |
| 2 | கோலப்போட்டி | | | |
| | சி. கேசவி | 01 | அபிநாஸ் | 01 |
| | நி. தஸ்மி | 02 | ப. தரணிகன் | 02 |
| | க. சரண்ஜன் | 03 | ஜனுசன் | 03 |
| | ஜெ. கஜீவன் | 04 | | |
| | கு. டக்ஷயா | 05 | | |
| 3 | தோரணம் பின்னுதல் | | | |
| | ஜெ. தக்சனா | 01 | கி. கிர்த்திகா | 01 |
| | க. சியாந்தி | 02 | ச.விபிஷா | 02 |
| | யூ. அபிநிஷன் | 03 | ச.தனுசன் | 03 |
| | ச. தனுசன் | 04 | | |
| | ம.கவின் | 05 | | |
| 4 | சரம் கட்டுதல் | | | |
| | ஸ்ரீ.ஹர்சிகா | 01 | டினோஜன் | 01 |
| | அ.பிருந்தா | 02 | இ.நிவேதிகா | 02 |
| | சு.அபிநயா | 03 | சு. சாணுஜன் | 03 |
| | சி. தரண்யன் | 04 | | |
| | சா. சாணுஜா | 05 | | |
| 5 | மாலை கட்டுதல் | | | |
| | து. தர்சிகா | 01 | மா. தாருமதி | 01 |
| | ஜெ. ஆரணி | 02 | ஜெ. சர்மிதன் | 02 |
| | தே. பிரவீணா | 03 | சி. மாதுளன் | 03 |
| | றொ.கேமா | 04 | | |
| | இ. றுக்சிகா | 05 | | |
| 5 | "சகலாகலாவல்லிமாலை" பாடுதல் | | | |
| | ஜெ.ஆரணி | 01 | | |
| | து.தர்சிகா | 02 | | |
| | மா. தாருமதி | 03 | | |
| | செ. திரிசாளினி | 04 | | |
| | இ.மளூஜா | 05 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களின் விபரம் - 2019

| இல | மாணவர் முழுப் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 01 | செல்வி. ஜெயகாந் ஆரணி | 178 |
| 02 | செல்வி. துரைலிங்கம் தர்சிகா | 177 |
| 03 | செல்வி. மாதவரூவன் தாருமதி | 169 |
| 04 | செல்வன். ஜெகதீஸ்வரன் பிரமிலன் | 163 |
| 05 | செல்வி. இராசகுலன் மருஜா | 160 |
| 06 | செல்வன். றதீஸ்குமார் துருவிந்தன் | 159 |
| 07 | செல்வி. சக்திவேல் சனுசியா | 159 |
| 08 | செல்வன். பிரதீக்குமார் சுவர்ணன் | 155 |
| 09 | செல்வி. செல்வரூவன் திரிசாளினி | 153 |
| 10 | செல்வி. தர்மகுமார சூரியாஸ் தர்மிகா | 152 |
| 11 | செல்வன். நகுலேஸ்வரன் அனுரதன் | 152 |

## 100 புள்ளிகளுக்கு மேல்

| | | |
|---|---|---|
| 01 | கருணாகரன் லக்ஸ்மிகா | 149 |
| 02 | சிவராசா தனுசிகன் | 147 |
| 03 | சுதர்சன் தஸ்மிகா | 146 |
| 04 | குணசேகரன் டனுசிகன் | 144 |
| 05 | யுகதீபன் செரோஸ்டில்சான் | 142 |
| 06 | வசந்தன் வபிஷன் | 139 |
| 07 | குணரஞ்சன் கனுசிகன் | 136 |
| 08 | சிவபாலன் மாதுளன் | 134 |
| 09 | நேசன் தேனுசா | 133 |
| 10 | தேவகுமார் கபிஷாந் | 120 |
| 11 | தவபாலன் கரிசன் | 120 |
| 12 | றொபேட் நிக்ஷன் நிசாந் | 120 |
| 13 | ஜெயராசா டிலக்சன் | 111 |
| 14 | சுரேஸ்குமார் திபிஷா | 110 |
| 15 | சுதாகரன் கேசிகா | 109 |
| 16 | பேரின்பநாதன் றிறோனிஸ் | 109 |
| 17 | தேவசீலன் பிரவீனா | 106 |
| 18 | இராஜேஸ்வரன் றுக்சிகா | 106 |
| 19 | அருளானந்தநாதன் சாணுக்கியா | 106 |
| 20 | பிரபாகரன் தசானி | 104 |
| 21 | றஜனிகாந் விதுஷாந் | 103 |
| 22 | மோகனதாஸ் ஜெரோன் | 100 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 70 புள்ளிகளுக்கு மேல்

| | | |
|---|---|---|
| 01 | செல்வகுமார் ஆகாஷ் | 97 |
| 02 | தரண்குமார் ஜான்சிகா | 88 |
| 03 | சிறிதரன் றேனுஜா | 87 |
| 04 | றமேஷ் ஜெயக்குமார் டெனிஷன் | 81 |
| 05 | ரவிகரன் மிதுஷா | 80 |
| 06 | சத்தியகுமார் கஷானன் | 79 |
| 07 | சதீஸ் டினுஷன் | 76 |
| 08 | சத்தியகுமார் கஜந்தன் | 73 |

**" உன் வாழ்வினுள் வரும் அனைத்து சங்கடங்களும்**
**உன்னை அழிக்க வரவில்லை,**
**உன் திறமையையும் மற்றும் உள்மன**
**சக்தியையும் வெளிப்படுத்த**
**ஒரு வாய்ப்பை அளித்துச் செல்கிறது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் ஆண்டு ரீதியான பகுப்பாய்வுகள் 2013 - 2019

| விபரம் | ஆண்டுகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
| விண்ணப்பித்தோர் தொகை | 47 | 52 | 39 | 49 | 50 | 60 | **48** |
| தோற்றியோர் தொகை | 45 | 51 | 39 | 49 | 50 | 60 | **46** |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தோர் | 08 | 06 | 03 | 07 | 06 | 10 | **11** |
| 100 புள்ளிக்கு மேல் சித்தியடைந்தோர் | 25 | 29 | 16 | 26 | 28 | 51 | **33** |
| 70 புள்ளிக்கு மேல் சித்தியடைந்தோர் | 36 | 45 | 29 | 44 | 46 | 58 | **41** |
| சித்தி வீதம் | **80%** | **88%** | **74%** | **95%** | **92%** | **97%** | **89%** |




*அறிவு கல்வி கற்பதும் கற்பிப்பதும்*
*மிக முக்கியம் அதே நேரத்தில்*
*குணத்தில் சிறந்த மனிதனை*
*உருவாக்குவதாக அவை அமைய வேண்டும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை புள்ளிப் பகுப்பாய்வு

| வகுப்பாயிடை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 40-69 | 05 |
| 70-99 | 08 |
| 100-151 | 22 |
| 152-200 | 11 |




வெற்றி என்பது உன் நிழல் போல்
நீ அதைத் தேடிப்போக வேண்டியதில்லை
நீ, வெளிச்சத்தை நோக்கி நடக்கும் போது
அது உன்னுடனே வரும்

அப்துல்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 இல் கிடைக்கப் பெற்ற அன்பளிப்புக்கள்

திருமதி கிருஸ்ணபிள்ளை சுமதி – போடியம்

திரு.செ. தேவராஜன் (Care for Education) - **05 Laptop**

திருமதி ஜெ.சுபாங்கி - **Fan**

திரு.க. சுப்பிரமணியம் - 03 வெற்றிக்கிண்ணம்

திரு.சி.யசோதரன் - வசந்த நிழல்

SJC, 87 Initiative - கணினி ஆசிரியர் சம்பளம் மாதம் **10000.00**

- தரம் -5 புலமைப்பரிசில் விசேட வகுப்புகளுக்கான அனுசரணை

திருமதி சுகுணா சுதாகரன்

(பழைய மாணவி லண்டன்) - சிங்கள ஆசிரியர் சம்பளம் மாதம் **5000.00**

## தரம் 2-A வகுப்பறை அழகுபடுத்தல்

- திரு.சி.சிறிதரன் - கேட்டின் சீலை ( யன்னல் )
- திரு.சு.ஶ்ரீகுமரன் - தளபாடம், நிலத்திற்கான பெயின்ற்
- திரு.அ.சிவகுமார் - தளபாடம், நிலம் பெயின்ட் அடிப்பதற்கான கூலி
- திரு.க.லோகேஸ்வரன் - சிமாட் போட்டுக்குரிய திரைச்சீலை

## ஆசியர்களின் அன்பளிப்பு

- திருமதி ப.சத்தியநாதன் (ஆசிரியர்) - நீர்த்தாங்கி
- திருமதி.ச.ஜெயக்குமார் (ஆசிரியர்) - பக்க நுழைவாயில் திருத்தவேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்புக்குழு

- தலைவர் : திரு.அ.பங்கையற்செல்வன்
- உபதலைவர் : திருமதி ம.கேதீஸ்வரன்
- செயலாளர் : திருமதி ந.ஜெகதீஸ்வரன்
- பொருளாளர் : திருமதி த.கௌரிபாலன்
- உறுப்பினர்கள்

: திரு.தே.நிகேதரன்

: திரு. சு.மதீகரன்

: திருமதி கீ.றதீஸ்குமார்

: திருமதி அ.துஸ்யந்தன்

**தலைகுனிந்து என்னைப்பார்**
**தலை நிமிர்ந்து உன்னை நடக்க**
**வைக்கிறேன்....!! புத்தகம்**

**இந்த உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்க**
**வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பி**
**பார்க்காதே........**

**ஹிட்லர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழாவிற்கு நிதி வழங்கிய பழைய மாணவர்கள் / நலன் விரும்பிகள்

| இல | பெயர் | இடம் | தொகை |
|---|---|---|---|
| 01 | திரு.கிருஸ்ணபிள்ளை உதயகுமார் | சுவிஸ் | 25000 |
| 02 | திரு.தங்கராசா ஜெயசீலன் (குட்டி) | பிரான்ஸ் | 30000 |
| 03 | திரு.பவானந்தன் குடும்பம் | வட்டக்கச்சி | 25000 |
| 04 | S.J.C 87 Initiative | | 30000 |
| 05 | திரு.நடராசா யோகநாதன் | சுழிபுரம் | 25000 |
| 06 | திரு.ப.கோபிகிருஸ்ணா | கனடா | 15000 |
| 07 | திரு.சு.அம்பிகைவாகு | பிரான்ஸ் | 15000 |
| 08 | திரு.ச.ஜெயக்குமார் | வட்டக்கச்சி | 10000 |
| 09 | திரு.S.பாலகுமார் | லண்டன் | 25000 |
| 10 | திரு.த.கோகுலன் | வட்டக்கச்சி | 30000 |
| 11 | திரு.அ.சிவகுமார் | வட்டக்கச்சி | 32500 |
| 12 | திருமதி.இந்திரகுமார் அருந்ததி | வட்டக்கச்சி | 10000 |
| 13 | திரு.ம.சதீஸ் | வட்டக்கச்சி | 12500 |
| 14 | திரு.க.கமலேஸ்வரன் | வட்டக்கச்சி | 30000 |
| 15 | திரு.நா.ஜெயரூபன் | வட்டக்கச்சி | 12500 |
| 16 | திரு.ச.சிவகுமார் | வட்டக்கச்சி | 5000 |
| 17 | திரு.சச்சிதானந்தசிவம் ராகுலன் | அவுஸ்ரேலியா | 25000 |
| 18 | வட்டக்கச்சி மத்திய கல்லூரி 1986 O/L மாணவர்கள் | | 50000 |
| 19 | கருணாகரன் விஜிந்தன் | | 50000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கல்விச் சுற்றுலாவின் பதிவுகள்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசந்த நிழலின் வண்ணக்கோலங்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடல் முன்னோடிப் பாடசாலை என்ற பெயர்ப்பலகை தாங்கிய வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலத்திரனியல் நூலக அங்குரார்ப்பண நிகழ்வின் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணி விழா நிகழ்வின் போது......



ஒளி விழா நிகழ்வின் போது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கிலமொழித் தினப் போட்டி நிகழ்வின் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அன்பளிப்பு வழங்கியோர்

| பெயர் | தொகை | காரணம் |
|---|---|---|
| திரு. S.பிரபாகரன் | 5000.00 | விளையாட்டுப் போட்டி |
| திரு.சி.சத்தியசீலன் | 10000.00 | விளையாட்டுப் போட்டி |
| திரு.சி.உதயன் | 25000.00 | விளையாட்டுப் போட்டி |
| பா.ஜெயகரன் | 10250.00 | விளையாட்டுப் போட்டி |
| க.கஜன் | 10250.00 | விளையாட்டுப் போட்டி |
| கிளி / மக்கள் வங்கி | 10000.00 | விளையாட்டுப் போட்டி |
| பொ.சிவபாலன் | 30000.00 | விளையாட்டு உபகரணம் |
| திருமதி க. சிந்துஜா | 10000.00 | மின்கட்டணம் |
| திரு.க. நவரெத்தினம் | 5300.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திருமதி ப.சிவநிதி | 10000.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திருமதி ப.ஜெயநிதி | 5000.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திரு.க. முருகவேல் | 10000.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திரு.பொ.பத்மகாந்தன் | 5000.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திருமதி.கீ.றதீஸ்குமார் | 5000.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திரு.ச.சிவகுமார் | 1685.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திரு.க.சுதர்சன் | 1685.00 | அபிவிருத்தி வேலைக்கானது |
| திரு.ப.கோபிகிருஸ்ணா | 3500.00 | வகுப்பிற்கான நீர் விநியோகம் |
| திருமதி த.பத்மநாதன்(ஆசிரியர்) | 16000.00 | புதிய கட்டடத் திறப்பு விழா அனுசரணை |
| கிளி / தேசிய சேமிப்பு | 10000.00 | பெயர்ப்பலகை |

## மாணவர்களுக்காக கிடைத்த உதவிகள்

- தீபன் டயானியா - துவிச்சக்கரவண்டி
- கண்ணதாசன் தனுசுயன் - துவிச்சக்கரவண்டி
- யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம் - 25 புத்தகப்பைகள்
- பரமநாதன் சின்னம்மா - **5000/=** கற்றல் உபகரணங்கள்
- கனகராஜா கணேசநாதன் - **13000/=** (புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு **1000/=** வீதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார உதவி பெற்ற பெற்றோர் விபரம்

- திருமதி.வ.பத்மஉதிஸ்ரன் - 45000/= மாடு வளர்ப்பு
- திருமதி.தே.தயாளினி - 80000/= கோழி வளர்ப்பு (கல்வி வளர்ச்சி அறக்கட்டளை)
- திருமதி.ச.நகுலேஸ்வரன் - 30000/=
- திரு.க.முருகவேல் (ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்) - 45000/= மாடு வளர்ப்பு

## 2019 திறன் வகுப்பறைக்கான அனுசரணை வழங்கியோர்

- திருமதி.க.கிருபாலினி - 250000/=
- திருமதி.நிர்மலா
- Dr.நித்தியானந்தன் (Ratnam Foundation - UK) - 374000/=
- மீள்குடியேற்ற அபிவிருத்தி அமைச்சு - 500000/=

### திருக்குறள் போட்டிக்கான அனுசரணை

- பொன்னம்பலம் முருகவேள்- Fபேன் வள்ளுவர் பாடசாலை, சுவிஸ்

### தாச்சிப் போட்டிக்கான அனுசரணை

- அமரர் விஜயமனோகர் ஞாபகார்த்தமாக நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் அவர்கள் 2019 ஆவது ஆண்டின் சிறந்த அதிபருக்கான குருபிரதீபா பிரபா விருது பெற்ற வேளை





## முதியோர் , சிறுவர் தின நிகழ்வின் பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விக் கண்காட்சியின் பதிவுகள்



மாதிரிச் சந்தையின் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நினைவுப் பரிசில்கள்

## தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை முதன் நிலை மாணவருக்கு அமரர் பொன் சபாபதி நினைவுப்பரிசு

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்று கிளி/வட்டக்கச்சி.ம.வி யில் புகழ்பூத்த அதிபராக 01.04.1978 தொடக்கம் 18.10.1984 வரையும் பின்னர் கிளி/இந்துக்கல்லூரியின் அதிபராகவும், கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளராகவும் இருந்து மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். எமது மாவட்டத்தின் கல்வி வரலாற்றில் இவரது காலப் பணி இன்னும் பெயர் சொல்லி பெருமைப்படும் நிலையில் அழியாததொன்றாக இருப்பது மனம் கொள்ளத்தக்கது.

அனுசரணையாளர்
அமரர் பொன் சபாபதி அவர்களின் மாணவருள் ஒருவர்
திரு.செல்வராசா கிருபாகரன் – ஜேர்மனி
(பழைய மாணவன் – கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உரை

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவை சிறந்த முறையில் நடாத்துவதற்கு எமக்கு ஆதரவு தந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம். குறிப்பாக இந்த விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து எம்மை உற்சாகப்படுத்திய வடக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு.அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்த பழைய மாணவனும், யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரியுமாகிய வைத்திய கலாநிதி ஞானசுந்தரம் கஜன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்விழாவினை முன்னெடுப்பதற்கு நிதி ஆதரவு தந்த புலம்பெயர் நாட்டில் வசிக்கும் பழைய மாணவர்கள் ஏனைய பழைய மாணவர்கள் இந்த விழாவினை நல்ல முறையில் நடாத்தி முடிப்பதற்கு ஆதரவு தந்த பாடசாலை அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இவ்விழாவின் நிறைவாக மலர் ஒன்றினை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு புகைப்படங்களை எடுத்து வழங்கிய சங்கர் புகைப்பட கலையகத்தினருக்கும், மலரினை அழகுற அச்சிட்டு வழங்கிய வேழன் பதிப்பகத்தினருக்கும், ஒலி,ஒளி அமைப்பினை வழங்கிய திலக்ஷன் சவுண்ட் நிறுவனத்தினருக்கும், நினைவுப் பரிசில்களை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும், கலை நிகழ்வுகளைப் பழக்கிய செல்வி.அனு அவர்களுக்கும் நன்றிகள் ஈற்றில் விழா சிறக்க ஆதரவு தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

பரிசளிப்பு விழா,
ஒழுங்கமைப்புக்குழு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org